**கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்ட உள்ளடங்கலாக 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2** கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை செயற்குழுவிற்குரியவாறு வழங்கப்பட்டுள்ள 09 கணக்காய்வு அறிக்கைகளில் 02 கமநல சேவை செயற்குழுக்களின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டும், 07 கமநல சேவை செயற்குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மறுப்பு அபிப்பிராயம் மற்றும் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமாக அமைந்திருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கி கணக்கீட்டு கொள்கைகளுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொலன்னாவ கமநல சேவை செயற்குழுவின் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் அனைத்தும் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பயன்படுத்தப்பட்ட ஒரு சில கணக்கீட்டுக் எண்ணக்கருக்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அனைத்துக் கணக்கீட்டுக் கொள்கைகளும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் இலக்கம் 118 முதல் 125 வரையான பிரிவுகளுக்கமைய, 04 கமநல சேவை செயற்குழுக்களினால் தேறிய சொத்துக்கள்/மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த கூற்று நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய எதிர்காலத்தில் செயற்படுவேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கமைய நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம கமநல சேவை செயற்குழுவின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், பல்வேறு இருப்புகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1,346,684 ஆகும். இருப்பினும், நிதி நிலைமைக்கூற்றில் குறித்த இருப்பின் பெறுமதி ரூபா 2,193,118 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால், ஆண்டிறுதி இருப்பின் பெறுமதி ரூபா 846,434 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | அளவீட்டு ரீதியான இருப்பு கணக்கு மீதிகளில் முன்னைய காலப்பகுதியிலிருந்தே காணப்படுகின்ற பௌதிக ரீதியாக இல்லாத இருப்பு மீதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவை முறையான அங்கீகாரத்தின் கீழ் பதிவழிப்பு செய்யப்படவில்லை. | சரியான இருப்புப் பெறுமதி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் பல வருடங்களாகக் காலாவதியான ரூபா 1,095,935 பெறுமதியான பல்வேறு இருப்பு மீதிகள், முறையான அங்கீகாரத்தைப் பெற்று புத்தகங்களிலிருந்து பதிவழிப்பு செய்யப்படாமல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றேன். பதிவழிப்பு செய்வதற்கான அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | முறையான அங்கீகாரத்தின் கீழ் சரிசெய்தல்களை மேற்கொண்டு சரியான இருப்பு மீதி நிதிக்கூற்றுகளில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | 05 கமநல சேவை செயற்குழுக்களினால் 2023 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 270,000 மென்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், 2025 ஜூன் மாதம் வரையிலும் குறித்த உபகரணங்கள் குழுக்களுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.<br>மேலும், ஹோமாகம மற்றும் பாதுக்க குழுக்களினால் கணக்கீட்டு மென்பொருள் மற்றும் உபகரணங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 108,000 முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் 2023 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | தேவையான சரிசெய்தல்களை மேற்கொண்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஹோமாகம கமநல சேவை செயற்குழுவின் புனரமைப்புப் பணிகளுக்காக 2024 ஒக்டோபர் மாதம் ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 2,440,745 முற்பணமானது கட்டிடக் கணக்கில் | இது ஒரு மூலதனச் செலவு என்பதால், கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களுக்கமைய கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னரே மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 04 கமநல சேவை செயற்குழுக்கள் மற்றும் 05 விவசாய வங்கிகளின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கான ரூபா 61,000 செலவினம் செலுத்தப்பட வேண்டிய செலவாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>அதேவேளை, 05 கமநல சேவை செயற்குழுக்கள் மற்றும் 04 விவசாய வங்கிகளின் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 61,000 ஆனது 2024 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் உரிய நிதியாண்டிற்கு அமைய கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | கொடகம - போபே வீதி அகலப்படுத்தப்பட்டமையால் ஹோமாகம கமநல சேவை செயற்குழுவிற்கு ஏற்பட்ட சேதத்திற்காக 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 3,917,967 இழப்பீட்டுத் தொகையானது நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்ததுடன், குறித்த பணம் கிடைக்கப்பெற்று 05 வருடங்கள் கடந்த போதிலும், அதனை முறையான அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்வதற்கோ அல்லது இழப்பீடு வழங்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இழப்பீட்டுப் பணத்தை அதற்குரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் அல்லது முறையான அங்கீகாரத்தின் கீழ் பயனுள்ள முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கோட்டை விவசாய வங்கியின் மீளாய்வாண்டிற்கான வைப்பு மீளளிப்புகள் ரூபா 65,896 நிதிச்செயலாற்றல் கூற்றில் ஒரு செலவினமாகக் காட்டப்பட்டிருந்ததுடன், வைப்புகளுக்கான வட்டி வழங்கல்கள் ரூபா 74,363 செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும் என்பதுடன், உரிய திருத்தங்கள் கணக்குகளில் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஏ) | கெஸ்பேவ கமநல சேவை செயற்குழுவினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற 01 ஏக்கர் 33 பேர்ச்சர்ஸ் பரப்பளவான காணியானது கெஸ்பேவ பிரதேச செயலாளரினால் 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி கையளிக்கப்பட்ட போதிலும், குறித்த காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | பாதுக்க மற்றும் ஹோமாகம ஆகிய இரு விவசாய வங்கிகளின் நிதிக்கூற்றுகளின்படி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று திரண்டநிதியக் கணக்கு மீதிகள் முறையே ரூபா 3,536,976 மற்றும் ரூபா 1,498,596 ஆகக் காணப்பட்ட போதிலும், பொதுப் பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டிலிருந்து திரண்ட நிதியக் கணக்குகள் சரியாகப் பேணப்படும் என்பது. | அனைத்துப் கொடுக்கல் வாங்கல்களுக்கும் உரிய கணக்குகள் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவை செயற்குழுக்களின் 07 கணக்கு விடயங்களுக்கு அமைவாக, நிதிக்கூற்றுகளுக்கும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய அறிக்கைகளுக்கும் இடையிலான மீதிகளில் மொத்தமாக ரூபா 672,498 பெறுமதியான இணக்கப்பாடற்ற வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான வகையில் இணக்கப்பாடுகளை மேற்கொண்டு கணக்குகள் அல்லது தொடர்புடைய அறிக்கைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 விவசாய வங்கிகளின் 07 கணக்கு விடயங்களுக்கு அமைவாக, நிதிக்கூற்றுகளுக்கும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய அறிக்கைகளுக்கும் இடையிலான மீதிகளில் மொத்தமாக ரூபா 640,095 பெறுமதியான இணக்கமற்ற வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | கஹதுடுவ மற்றும் கொஸ்கம ஆகிய இரு விவசாய வங்கிகளின் நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்றச் சுருக்கத்திற்கும், அறவிடப்பட வேண்டிய கடன் மற்றும் கிடைக்க வேண்டிய கடன் வட்டி மீதிகளுக்கும் இடையில் முறையே ரூபா 4,508,170 மற்றும் ரூபா 294,064 பெறுமதியான இணக்கப்பாடற்ற வேறுபாடுகள் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றேன். | -மேற்படி- |

### 1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் 05 கமநல | ஏற்றுக்கொள்கின்றேன். | துணை ஆவணங்களுடன் |

| | | |
|---|---|---|
| சேவை செயற்குழுக்களின் 226 நாட்குறிப்பேட்டு பதிவுகளும் 03 விவசாய வங்கிகளின் 44 நாட்குறிப்புப் பதிவுகளும் முன்கூட்டிய அங்கீகாரத்தைப் பெறாமல் நாட்குறிப்பேட்டு பதிவுகளாக தயாரிக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தன. அத்துடன், ஹோமாகம விவசாய வங்கியின் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல்களுக்காக நாட்குறிப்பேட்டு பதிவுகள் இடப்படாமலேயே கணக்குகளில் பதியப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடத்திலிருந்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு உறுதிச்சீட்டுகளை தயாரித்து, அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே நாளேட்டு குறிப்புகள் இடப்பட வேண்டும். அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.5 தொங்கல் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாலம்பே கமநல சேவை செயற்குழுவின் தொங்கல் கணக்கில் 33 வருடங்களாகக் காணப்படுகின்ற ரூபா 145,543 கொண்ட செலவு மீதியும், 13 வருடங்களாகக் காணப்படுகின்ற ரூபா 222,621 கொண்ட வரவு மீதியும் மற்றும் ரூபா 115,297 கொண்ட செலவு மீதியும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொஸ்கம கமநல சேவை செயற்குழுவின் 10 வருடங்களாகக் காணப்பட்ட இடைநிறுத்தக் கணக்கின் ரூபா 254,065 கொண்ட பற்று மீதியானது, மீளாய்வாண்டின் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஆராய்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதிகளுக்கான காரணங்களை விரைவாகக் கண்டறிந்து கணக்குகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.6 கணக்காய்வுக்காக எழுத்து மூலமாக சாட்சிகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 09 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 35,577,781 பெறுமதியான நிதியல்லாத சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், குறித்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான நிலையான சொத்துப் பதிவேடுகள் | எதிர்கால கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது உரிய விரிவான ஆவணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியல்லாத சொத்து மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள0ளச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 06 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 4,897,832 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்ட போதிலும், குறித்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்கால கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது உரிய விரிவான ஆவணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துமூலச் சான்றுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொஸ்கம கமநல சேவை செயற்குழுவின் ரூபா 1,426,169 கொண்ட நீண்டகாலக் கடன் மீதியின் துல்லியத்தன்மையை பரிசோதிப்பதற்கான போதிய எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை அளிக்கப்படும். | நீண்டகாலக் கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வினால் கோரப்பட்ட எழுத்துமூலச் சான்றுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 08 விவசாய வங்கிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 53,063,960 ஆகக் காணப்பட்ட பல்வேறு வைப்பு மீதிகளின் துல்லியத்தன்மையை பரிசோதிப்பதற்கான போதிய எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்கால கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது உரிய விரிவான ஆவணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பல்வேறு வைப்பு மீதிகளின் துல்லியத்தன்மையை பரிசோதிப்பதற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அல்லது முறையான எழுத்துமூலச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | மாலம்பே கமநல சேவை செயற்குழுவினால் நான்கு சக்கர டிராக்டர் வண்டி 2017 ஆம் ஆண்டில் பாதுக்க கமநல சேவை செயற்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த டிராக்டர் வண்டியைப் பெற்றுக்கொண்டமை தொடர்பான எவ்வித எழுத்துமூலத் தகவல்களும் பாதுக்க கமநல சேவை செயற்குழுவினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன், டிராக்டர் வண்டியின் பெறுமதியும் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | டிராக்டர் வண்டியைப் பொறுப்பேற்றுக்கொண்டமை தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கும், டிராக்டர் வண்டியின் பெறுமதியை நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் ருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 53(4)(அ) பிரிவு | 08 கமநல சேவை செயற்குழுக்களின் காணிப் பதிவேடுகள், 03 வருடங்களுக்கு ஒருமுறை ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணிப் பதிவேடுகளைச் சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கு இணங்க காணிப் பதிவேடுகளைப் பரிசோதித்துச் சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கமையச் செயற்படாத தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 134 (3) | கொழும்பு மாவட்டத்தின் 09 கமநல சேவை செயற்குழுக்களில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கமநல உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க, உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை அறிக்கைகளின் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 188 (2) | ஹோமாகம கமநல சேவை செயற்குழு மற்றும் பாதுக்க விவசாய வங்கி ஆகியவற்றில் 03 முதல் 14 வருடங்கள் வரை காலாவதியான, வைப்புச் செய்யப்பட்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். | வைப்புச் செய்யப்பட்டும் வசூலிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களுக்கு அமைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வசூலிக்கப்படாத மொத்தப் பெறுமதி ரூபா 64,915 கொண்ட 05 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 396 | கொஸ்கம மற்றும் ஹோமாகம ஆகிய இரு கமநல சேவை செயற்குழுக்களில் 02 முதல் 10 வருடங்கள் வரை காலாவதியான, வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத மொத்தப் பெறுமதி ரூபா 78,139 கொண்ட 07 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிதி பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுத்துத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (iv) | நி.பி. 757 (2) (அ) | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், மீளாய்வாண்டிற்குரிய 09 கமநல சேவை செயற்குழுக்களின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க, வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 4/2012 இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.6(1) ஆம் பந்தி | விவசாய வங்கியுடன் தொடர்புடைய அனைத்துக் கணக்குகளும் கமநல சேவை செயற்குழுவின் வருடாந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், 09 கமநல சேவை செயற்குழுக்களினால் | ஏற்றுக்கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் 5.6(1) ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு செயற்படவில்லை. | | |
| (ஈ) | 2020 ஜூன் 25 ஆம் திகதிய 8/2020 இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | கொழும்பு மாவட்டத்தின் 08 கமநல சேவை செயற்குழுக்களில் பொருட்கள் மற்றும் பணத்திற்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்களினால், சுற்றறிக்கைக்கு இணங்க வைப்புச் செய்யப்பட வேண்டிய குறித்த பிணைப் பணங்கள் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த பிணைப் பணங்களை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க குறித்த பிணைப் பணங்களை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2024 ஆம் ஆண்டில் 08 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 5,810,977 தொகையான மிகையும், கொலன்னாவ கமநல சேவை செயற்குழுவில் ரூபா 84,363 பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 07 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 5,809,295 மிகையும், கஹதுடுவ மற்றும் கொலன்னாவ ஆகிய இரு கமநல சேவை செயற்குழுக்களில் மொத்தமாக ரூபா 784,397 பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகளின்படி 09 விவசாய வங்கிகளில் ரூபா 5,672,325 மிகை ஏற்பட்டிருந்ததுடன், அதற்கொப்ப கடந்த ஆண்டில் 09 விவசாய வங்கிகளில் ரூபா 4,546,692 தொகையான மிகை ஏற்பட்டிருந்தது.

### 2.2 நிதிப் பெறுபேற்று பகுப்பாய்வு

(அ) 07 கமநல சேவை செயற்குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 5,600,723 மிகையாக காணப்பட்டதுடன், அதற்கொப்ப குறித்த 07 குழுக்களினதும் கடந்த ஆண்டின் மொத்த மிகைப் பெறுமதி ரூபா 5,809,295 ஆகக் காணப்பட்டமையால், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 208,572 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. கெஸ்பேவ கமநல சேவை செயற்குழுவினால் மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் மற்றும் வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவ வருமானம் குறைந்தமை இப்பின்னடைவிற்குப் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

(ஆ) கஹதுடுவ கமநல சேவை செயற்குழுவின் மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 210,254 மிகையாகக் காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 217,913 ஆகக் காணப்பட்டமையால், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 428,167 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவ வருமானம் அதிகரித்தமை மற்றும் அறை வாடகை வருமானம் அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்குப் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

(இ) கொலன்னாவ கமநல சேவை செயற்குழுவின் மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 84,363 பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன், அதற்கொப்ப கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 566,484 ஆகக் காணப்பட்டமையால், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 482,121 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவ வருமானம் மற்றும் அறைக் கூலி வருமானம் அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்குப் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

(ஈ) 09 விவசாய வங்கிகளின் மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 5,672,325 மிகையாகக் காணப்பட்டதுடன், அதற்கொப்ப கடந்த ஆண்டில் குறித்த வங்கிகளின் மொத்த மிகைப் பெறுமதி ரூபா 4,546,692 ஆகக் காணப்பட்டமையால், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 1,125,633 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. வங்கித் கடன் வட்டி வருமானம் அதிகரித்தமை இதற்குப் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

(உ) உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் நாற்றுகள், விவசாய உபகரணங்கள் உள்ளிட்ட விவசாயப் பொருட்களை விற்பனை செய்வது கமநல சேவை செயற்குழுக்களின் முதன்மையான பணியாகும். மீளாய்வாண்டிற்குரிய 09 கமநல சேவை செயற்குழுக்களின் மொத்த விற்பனை வருமானம் ரூபா 29,056,551 ஆகக் காணப்பட்டதுடன், அதனுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் 09 கமநல சேவை செயற்குழுக்களின் மொத்த விற்பனை வருமானம் ரூபா 29,300,673 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மொத்த விற்பனை வருமானம் ரூபா 244,122 இனால் குறைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கெஸ்பேவ கமநல சேவை செயற்குழுவிற்குச் சொந்தமான 11 விற்பனை நிலையங்களுக்கு உரிய குத்தகை ஒப்பந்தங்களின் காலப்பகுதி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முடிவடைந்திருந்ததுடன், 2021 பெப்ரவரி மாதத்தில் அனைத்து விற்பனை நிலையங்களினதும் குத்தகை வாடகையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், குறித்த வாடகை அதிகரிப்பிற்கு இணங்காமை காரணமாக 2021 மார்ச் மாதத்திலிருந்து குத்தகை வாடகையைச் செலுத்துவது தவிர்க்கப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 2,210,765 ஆகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 295,714 மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாகும். இவ்விற்பனை நிலையங்களைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்விற்கு அமைவாகச் செயற்படுத்தப்பட வேண்டிய பரிந்துரையானது, தற்போதுள்ள அனைத்து விற்பனை நிலையங்களையும் விவசாய அமைப்புகள் மற்றும் வர்த்தகர்களுக்கு பகிரங்கப் போட்டித்தன்மையுடனான பெறுகை செயல்முறையினூடாக கூடிய விலைகளுக்கு வழங்கப்பட வேண்டும் | நிலுவைப் பணத்தை விற்பனை நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இவ்விற்பனை நிலையங்களைப் புனரமைத்து பகிரங்க பெறுகை செயல்முறையின் கீழ் கொள்வனவாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும், வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி போட்டித்தன்மையுடனான பெறுகை நடைமுறைக்கு அமைவாகச் செயற்பட்டு குழுவின் வருமானமீட்டலை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பதாகும். இருப்பினும், 2025 ஜுன் மாதமாகும் போது குறித்த அறிக்கை கிடைக்கப்பெற்று ஏறக்குறைய 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், உரிய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கஹத்துடுவ கமநல சேவை செயற்குழுவிற்குச் சொந்தமான 1989 ஆம் ஆண்டு பயங்கரவாத அச்சுறுத்தலின் போது பொலிஸ் நிலையத்திற்காக தற்காலிகமாக வழங்கப்பட்ட நிலம், மீளாய்வாண்டின் இறுதியில் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 06 கமநல சேவை செயற்குழுக்கள் நிறுவப்பட்டிருந்த நிலங்கள், மீளாய்வாண்டின் இறுதியில் அக்குழுக்களால் கையகப்படுத்தப்படவில்லை. | கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் கையகப்படுத்தப்படவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, குழுக்களுக்குச் சொந்தமான காணிகளின் உரிமையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ‘‘கோவி செவன’’ வேலைத்திட்டத்திற்காகப் பாதுக்க கமநல சேவை செயற்குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 82 பேர்ச் கொண்ட ‘‘தம்போர’’ காணியை பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தம்போர விவசாய அமைப்பினால் காணி பராமரிக்கப்படுவதுடன், ‘‘சேவா பியச’’ கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | காணியை முறையான விதத்தில் பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை செயற்குழுக்களுக்குச் சொந்தமான, 2024 ஆம் ஆண்டின் பெரும் போகத்தில் நெற்செய்கை பண்ணக்கூடிய வயல் நிலப்பரப்பு 12,888 ஏக்கர்களாக இருந்த போதிலும், பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 7,873 ஏக்கர்களாக மாத்திரமே காணப்பட்டது. அதற்கமைய, நெற்செய்கை பண்ணக்கூடிய வயல் நிலப்பரப்பில் 5,015 ஏக்கர்கள் பயிரிடப்படாமல் இருந்தன. | தொழிலாளர் தட்டுப்பாடு, வெள்ளப் பாதிப்பு மற்றும் முழுநேர விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் இல்லாமை காரணமாகப் பயிரிடுவதற்கு ஆர்வம் காட்டாமை. | நெற்செய்கை பண்ணக்கூடிய வயல் நிலப்பரப்பை நெற்செய்கைக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஆ) | பல வருடங்களாகக் காணப்படுகின்ற 08 கமநல சேவை செயற்குழுக்களின் மொத்த பெறுமதியான ரூபா | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்கள் | கிடைக்க வேண்டிய மீதிகளைக் காலோசிதமான முறையில் அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 4,572,104 கொண்ட கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கும், 07 கமநல சேவை செயற்குழுக்களின் மொத்த பெறுமதியான ரூபா 5,753,615 கொண்ட செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்குமான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப்பெற்ற பின்னர் மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது முறையான அனுமதியைப் பெற்றுப் பதிவழிப்புச் செய்தல் மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது முறையான அனுமதியைப் பெற்றுத் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுகளின்படி, 04 கமநல சேவை செயற்குழுக்களின் வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியமை தொடர்பாக, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 2,313 பேர்ச்சுகளுக்கு உரிய 60 சதவீத வருமானமாக ரூபா 5,004,272 பெறப்பட்டிருந்த போதிலும், குறித்த வயல் காணி அளவுகள் தொடர்பாகக் காணிப் பெயர் இடாப்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | மாலம்பே, கோட்டை மற்றும் பாதுக்க கமநல சேவை செயற்குழுக்கள் பதில்களைச் சமர்ப்பிக்கவில்லை. | பதிவேடுகளைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாலம்பே கமநல சேவை செயற்குழுவினால் வழக்குத் தொடரப்பட்டிருந்த ஒரு ஏக்கர் பரப்பளவைக் கொண்ட "தியபரகஹ" வயல் காணி தொடர்பாக 2022 ஏப்ரல் 04 ஆம் திகதி நிலையான தடையுத்தரவின் கீழ் வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பின்னர் மீண்டும் வழக்குத் தொடர்வதற்காக 2023 நவம்பர் 22 ஆம் திகதி கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தினால் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு வழக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 ஜூன் மாதம் வரையிலும் மீண்டும் வழக்குத் தொடர்வதற்குத் தேவையான | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கு முரணாகச் செயற்பட்டமை தொடர்பாகத் தாமதமின்றி முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், குறித்த பணியைத் தாமதப்படுத்தும் தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் களம் அமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டு 15 மாதங்களுக்கும் மேலான காலம் கடந்திருந்தும் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மாலம்பே கமநல சேவை செயற்குழுவிற்குச் சொந்தமான 02 ரூட் பரப்பளவைக் கொண்ட ''ஹிக்கஹ'' எனும் வயல் காணி சட்டவிரோதமாக நிரப்பப்பட்டமை தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டு தடையுத்தரவு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு எதிராக விடைப்பகர்வுத் தரப்பினரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மூலம் வழங்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், விடைப்பகர்வுத் தரப்பினரால் வழக்கினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. அக்கோரிக்கைக்கு இணங்க, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் 2023 திசெம்பர் மாதத்தில் குறித்த வயல் காணியின் ஒரு பேர்ச்சிற்கு ரூபா 20,000 வீதம் குழுவிற்கு அறவிட்டு வழக்கினைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, விடைப்பகர்வுத் தரப்பினரால் மேட்டுநிலச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக 2023 இல் 80 பேர்ச்சுகளுக்கு ரூபா 1,600,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், விடைப்பகர்வுத் தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க அக்காணியின் எஞ்சிய 20.2 பேர்ச் நிலப்பரப்பிற்கு ரூபா 404,000 செலுத்தி மேட்டுநிலச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குக் கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் வெளியிடப்பட்ட 2005 மே 13 ஆம் திகதிய 04/08/9 ஆம் இலக்கக் கடிதத்திற்கு இணங்க, வயல் காணியொன்றை நிரப்ப எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர் ஒருவரால் பின்பற்றப்பட | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கு இணங்காத வகையில் செயற்பட்டமைக்காக ஆரம்பிக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை, பின்னர் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லாமல் நட்டஈட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமையானது ஒரு தவறான முன்மாதிரியாக அமையாதிருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்துடன் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அறிவுறுத்தக் கடிதத்திற்கு இணங்க வயல் காணிகளை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாகச் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், குறித்த அறிவுறுத்தல்களை மீறியமை தொடர்பாகப் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டிய நடைமுறைக்கமைய, மேற்கூறிய ஹிக்கஹகும்புர காணியை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வாறு அனுமதி வழங்கும் போது, வயல் வெளியின் மத்தியில் அமைந்துள்ள வயல் காணி, வாய்க்கால் எல்லையில் அமைந்துள்ள வயல் காணி, மூன்று பக்கமும் வயல்களால் சூழப்பட்ட வயல் காணி மற்றும் பயிரிடத்தக்க வயல் காணிகளுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய வயல் காணியானது தற்போது விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வயல் வெளியின் மத்தியிலும் வாய்க்காலுக்கு அண்மையிலும் அமைந்திருந்தது. அதற்கமைய, உரிய விதிகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ள நிலையில், விடைப்பகர்வுத் தரப்பினரின் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் வழக்கினைச் சமரசமாகத் தீர்த்துக்கொண்டு குறித்த வயல் காணியை ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியமை சர்ச்சைக்குரியதாக இருந்தது. | | |

### 3.4 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம கமநல சேவை செயற்குழுவிலுள்ள 02 நடைமுறைக் கணக்குகள் செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன், குறித்த கணக்குகளில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 74,860 மீதி காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | செயலற்ற வங்கிக் கணக்குகளைத் தொடர்ந்து பேணிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லையெனில், முறையான அனுமதியைப் பெற்று அக்கணக்குகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் | ஏற்றுக்கொள்கின்றேன். உரிய சீராக்கங்களுக்காக | நிதி மோசடிகள் தொடர்பாகப் பொறுப்புக்கூற வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டிருந்த கொஸ்கம மற்றும் கோட்டை ஆகிய இரு விவசாய வங்கிகளில் இடம்பெற்ற ரூபா 1,048,405 நிதி மோசடிகளில், கொஸ்கம விவசாய வங்கிக்கு உரிய ரூபா 300,000 மாத்திரம் 2025 ஜூலை ஆகும்போது அறவிடப்பட்டிருந்தது. இந்நிதி மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டு 08 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கும் மேலான காலம் கடந்துள்ள போதிலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நிதி ஒழுங்குவிதி 104 மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அந்த அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | தரப்பினருக்கு எதிராக தாபனவிதிக் கோவை மற்றும் நிதி பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கோட்டை கமநல சேவை செயற்குழுவின் 2008 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 764,838 கொண்ட இருப்பு பற்றாக்குறையில் ரூபா 683,215 பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் வெளிப்படுத்தப்படாத காரணத்தினால், மேலதிக நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | நிதி மோசடிகள் தொடர்பாகப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக தாபனவிதிக் கோவை மற்றும் நிதி பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாலம்பே கமநல சேவை செயற்குழுவின் 2024 ஆம் ஆண்டில் ரூபா 224,363 பெறுமதியான இருப்புகளைப் பதிவழிப்பு செய்வதற்கு, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் இருப்பின் அளவுகள் மற்றும் அதற்குரிய பெறுமதிகள் குறிப்பிடப்படாமல் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய இருப்புப் பதிவழிப்புகள் தொடர்பாகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையில் ரூபா 213,174 பெறுமதியான இருப்புகள் பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுகளில் பதிவழிப்பு | 2012 ஆம் ஆண்டின் இருப்புப் புத்தகங்களைப் பரிசீலித்து, அதற்கு முன்னர் காணப்பட்ட காலாவதியான இருப்புகள் மற்றும் 2012 முதல் 2023 ஆம் ஆண்டு வரை அழிவடைந்த இருப்புகள் பரிசீலிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு குழுவினால் பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன. | இருப்புப் பதிவழிப்புகளின் போது முறையான நடைமுறைகளுக்கு இணங்க, துல்லியமான இருப்பு அளவு மற்றும் பெறுமதிகளை இனங்கண்டு பதிவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முறைக்கேடாகச் செயற்பட்ட தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 224,363 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 11,189 வேறுபாடு காணப்பட்டது. மேலும், குறித்த இருப்புப் பதிவழிப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 42,525 பெறுமதியான 1,575 அழிவடைந்த விதைப்பொதிகள் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகள் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், அவ்விருப்புகள் 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டவை அல்ல என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் 12 உழவு இயந்திரங்களும் 04 இழுவைப்பெட்டிகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் புனரமைக்க முடியுமாயின் அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது சொத்துக்களைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுமாயின் முறையான அனுமதியின் கீழ் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாதுக்க கமநல சேவை செயற்குழுவின் களஞ்சியசாலையினுள் 2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த 2,465 கிலோ யூரியா உரம், 5,789 கிலோ எம்.ஓ.பி (M.O.P) உரம் மற்றும் 800 கிலோ ஈ.ஆர்.பி (E.R.P) உரம் என்பன காணப்பட்டதுடன், இந்த ஈ.ஆர்.பி (E.R.P) உர இருப்பானது புத்தகங்களிலும் உள்ளடக்கப்படவில்லை. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து இருப்புகளையும் புத்தகங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதுடன், அவை காலாவதியாவதற்கு முன்னர் இருப்புகள் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 09 விவசாய வங்கிகளினால் கணினி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மொத்தப் பெறுமதியான ரூபா 1,767,085 மீதியானது 2023 ஆம் ஆண்டில் மாவட்ட அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் குறித்த கணினி அச்சுப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் குழுவிற்குப் | எதிர்காலத்தில் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் காணப்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொண்டு, குறித்த சொத்துக்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலும் அவ்வுபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான கணினி மென்பொருள் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படாமை காரணமாக இவ்வுபகரணங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மாவட்ட அலுவலகம் மற்றும் 09 கமநல சேவை செயற்குழுக்களுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 433 ஆகவும் உண்மையான பதவியணி 365 ஆகவும் காணப்பட்டமையால், பதவிகளில் 77 வெற்றிடங்களும் 09 மிகைகளும் காணப்பட்டன. அவற்றில் 09 கமநல சேவை செயற்குழுக்களில் 312 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி பிரிவுகள் காணப்படுவதுடன், 53 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காணப்பட்டன. அத்துடன் 09 கமநல சேவை செயற்குழுக்களிலும் தலா ஒரு விவசாய வங்கி உத்தியோகத்தர் மற்றும் விவசாய வங்கி உதவியாளர் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதவியணி மீளாய்வொன்றைச் செய்து, அத்தியாவசியமான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கோட்டை மற்றும் கொலன்னாவ ஆகிய 02 கமநல சேவை செயற்குழுக்களுக்கு உரிய 38 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்பட்ட போதிலும், குறித்த 02 குழுக்களிலும் நெற்செய்கை பண்ணக்கூடிய வயல் நிலங்கள் 09 பிரிவுகளில் மாத்திரமே காணப்பட்டன. மேலும், 2023 நவம்பர் 23 ஆம் திகதிய 2359/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம், கோட்டை கமநல சேவை செயற்குழுவிற்குச் சொந்தமான 21 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர் பிரிவுகள், 05 பிரிவுகள் வரை திருத்தப்பட்டிருந்த போதிலும், 15 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் இந்த 05 பிரிவுகளுக்கு அமைய இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உத்தியோகத்தர்கள் வீட்டுத்தோட்டம் மற்றும் ‘‘சிதமு” மகளிர் வேலைத்திட்டத்திற்கு உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். எஞ்சிய உத்தியோகத்தர்களை ஏனைய கமநல சேவை செயற்குழுக்களுக்கு இணைப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும். | பிரிவொன்றினுள் நடைமுறைப்படுத்தப்படும் வயல் நிலங்கள் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அமைய, தேவையான விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்து இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நான்கு விவசாய வங்கிகளினால் 34 கடனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பல்வேறு கடன்கள் மற்றும் அதற்குரிய வட்டியுடன் சேர்த்து ரூபா 927,889 தொகை 02 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும், அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன்களில் பெரும்பாலான கடன் மீதிகள் தொடர்பாக தற்போது கமநல நியாய சபையில் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. | காலோசிதமான முறையில் கடன்களை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் கடன்களை அறவிடுவதற்குத் தேவையான விரைவான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும |